1991 செப்டம்பர் 20] [திரு. வி. தண்டாயுதபாணி]

சட்டம், அரசியல் சட்டத்திலே 9-வது பிரிவின் கீழே, அரசியல் சட்டத்தினுடைய 9-வது பிரிவின் கீழே தான் அதைக் கொண்டு வர வேண்டும் என்று அன்றைய தினம் புரட்சித் தலைவி அவர்கள் சொன்னார்கள் என்பதைச் சொல்லி, நெசவாளர்களுடைய துயர் துடைப்பதிலே இந்த அரசாங்கம் எடுக்கின்ற எல்லா முயற்சிகளுக்கும் நாங்கள் உறுதுணையாக இருப்போம் என்று அன்புடன் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன். நன்றி. வணக்கம்.

4. விதி 110-இன் கீழ் உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சரின் அறிக்கை.

தமிழ்நாடு நுகர்பொருள் மற்றும் வாணிபக் கழக ஊழியர்களுக்கு ஊதிய உயர்வு அளித்தல் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் பேரவை விதி 110-ன் கீழ் பேரவைக்கு ஓர் அறிக்கை அளிப்பார்கள்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்களின் ஆணையின்படி, 15–9–1991 முதல் ஏக போகக் கொள்முதல் தஞ்சை, திருச்சி, புதுக்கோட்டை, மற்றும் தென்னாற்காடு மாவட்டத்தின் சில பகுதிகளில் ஆரம்பிக்கப்பட்டு தீவிரமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. இப்பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ள தமிழ்நாடு நுகர்பொருள் மற்றும் வாணிபக் கழக பருவகால ஊழியர்களின் நெடுநாளைய ஊதிய உயர்வு கோரிக்கைகளை புரட்சித் தலைவியின் அரசு பதவி ஏற்றவுடன் மிகுந்த அக்கறையுடன் பரிசீலிக்கத் தொடங்கியது. இதன் விளைவாக வாணிபக் கழகத்தின் தலைவர் அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக தொழிற்சங்கப் பேரவை, தி.மு.க. தொழிற்சங்கப் பேரவை, ஏ.ஐ.டி.யு.சி. தொழிற்சங்கம், இந்திய தேசிய காங்கிரஸ் தொழிற் சங்கப் பேரவை, ஷாப் அண்டு ஜெனரல் ஒர்க்கர்ஸ் யூனியன் ஆகியோருடன் பேச்சு வார்த்தை நடத்தப்பட்டது. அந்த பேச்சு வார்த்தையில் திருப்திகரமான முடிவு ஏற்படாத சூழ்நிலையில் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்களின் ஆணையின்படி நான் 18–9–1991 அன்று காலை தொழிற்சங்கப் பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தினேன்.

பேச்சு வார்த்தையின் முடிவில் தொழிற்சங்கங்களால் வைக்கப்பட்ட முக்கியமான கோரிக்கைகள் புரட்சித் தலைவியின் ஒப்புதலுடன் ஏற்றுக்கொள்ளப்பட்டது என்பதை இந்த மாமன்றத்

]திரு. க, ராசாராம்] [1991 செப்டம்பர் 20

திற்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த உடன்பாட்டின்படி நேரடிக் கொள்முதல் நிலையங்களில் பணியாற்றும் பருவகால ஊழியர்களுக்கு குறைந்தபட்சமாக தற்போதைய ஊதியத்திலிருந்து ரூ. 120-ம் அதிகபட்சமாக ரூ. 210-ம் அளிக்கப்பட உள்ளது. தற்பொழுது ஏற்பட்டுள்ள ஏற்பாட்டின்படி தமிழ் நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு 12.55 லட்சம் ரூபாய் கூடுதலாகச் செலவாகும். இந்த ஆண்டு மட்டும் (1991-92) ரூபாய் சுமார் 7.50 இலட்சம் கூடுதலாகச் செலவாகும். மேலும் நேரடிக் கொள்முதல் நிலையங்களில் உள்ள சுமார் 3,000 ஊழியர்கள் பயனடைவார்கள். மேலும் நேரடிக் கொள்முதல் நிலையங்களில் உள்ள 9,000 சுமை தூக்குபவர்களுக்கும் மூட்டை தூக்கும் கூலி கணிசமாக உயர்த்தப்பட்டுள்ளது. அவர்களுக்கு இப்போது 10 சதவிகிதம் கூலி உயர்த்தப்பட்டிருக்கிறது. தொழிற்சங்கங்களின் நெடுநாளைய கோரிக்கையான நேரடிக் கொள்முதல் நிலையங்களில் பருவ காலங்களில் பணியமர்த்தப்படும் ஊழியர்கள் வாணிபக் கழகத்தில் ஏற்படும் நிரந்தரப் பணியிடங்களில் அமர்த்தப்பட வேண்டும் என்பதையும் தமிழக முதல்வர் ஏற்றுக் கொண்டுள்ளார் என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதனபடி கழகத்தில் ஏற்படும் நிரந்தர காலியிடங்களுக்கு ஏற்கெனவே கழகத்தில் உள்ள தகுதியுள்ள கீழ்நிலைப் பணியாளர்களுக்கு பதவி உயர்வு அளித்த பின்பும் உள்ள காலியிடங்களுக்கு மேற்கூறிய பருவ கால ஊழியர்களை அமர்த்தலாம் என்று முடிவெடுக்கப்பட்டது.

முற்பகல் 10-10

அத்தோடு இந்த பணியில் ஏராளமான பட்டதாரிகள் பணி புரிகிறார்கள் என்பதை அறிந்தேன். ஆகவே மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களிடம் நான் கேட்டுக்கொண்ட பிறகு அவர்களுக்கும் ஏதாவது தரவேண்டும் என்று அவர்கள் சொன்னார்கள். அதன்படியாக இந்த 3 ஆயிரம் ஊழியர்களில் ஏறத்தாழ 90 சதவிகிதம் பேர். எல்லோரும் பட்டதாரிகள். அது ஹெல்பராக இருந்தாலும், பில் கலெக்டராக இருந்தாலும் பட்டதாரிகளாக இருக்கிற காரணத்தினாலே அவர்களுக்கு50, 50 ரூபாய் சேர்த்து கொடுப்பதாக முடிவு எடுக்கப்பட்டுள்ளது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். இவர்களை வேறு நிரந்தரபணியில் அமர்த்த வயதுவரம்பு குறித்த விதிமுறைகளைத் தளர்த்த வேண்டுமாயின், அரசு ஒப்புதல் அதற்கு அளிக்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.